
தாசேக் பெர்மாய் தமிழ்ப்பள்ளி

## வழிக்காட்டிக் கட்டுரை : அச்சம் தவிர்

கட்டளை : அச்சம் தவிர் எனும் சிறுகதை வரிசைப்படுத்தி மீண்டும் எழுதுக.

ஆக்கம் : ஷாமினி சந்திரன்




| | |
|---|---|
| "காப்பாற்றுங்கள்! "காப்பாற்றுங்கள்!" என்று பலம் கொண்டு கூச்சலிட்டாள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சத்தம் கேட்டத் திசையில் உடனே குழுமினர். திருடன் நுழைந்த தகவலைக் கூறிவிட்டு உடனே காவல் நிலையத்திற்கும் தகவல் கூறினாள். அதற்குள் அங்குள்ளவர்கள் திருடனைக் கையும் களவுமாகப் பிடித்தனர். | ◯ |
| பக்கத்து வீட்டுக் கதவு திறந்து கிடந்தது. யாராவது வந்திருப்பார்களோ என்கிற சந்தேகத்துடன் அவ்வீட்டின் உள்ளே எட்டிப் பார்த்தாள். சட்டென உள்ளே கண்ணாடி உடையும் ஓசை கேட்டு அதிர்ந்தாள். திருடன் இங்குத்தான் நுழைந்துள்ளான் என்பதை உறுதி செய்தவள் வீட்டிற்குள் இருந்தால் ஆபத்து என்றெண்ணி விரைந்து வெளியே ஓடினாள். | ◯ |
| சற்று முன்பைவிட கதவை உடைத்துத் திறக்கும் சத்தம் வேகமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மைதிலுக்குச் சந்தேகம் கூடியது. சட்டென 'அச்சம் தவிர் ' என்கிற பாரதியாரின் கூற்றை மனத்தில் ஏற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தாள். | ◯ |
| 'கதவைப் பூட்டிதானே வச்சேன்... ஏதோ சத்தம் கேட்குதே? அப்பாவாக இருக்குமோ?' என்கிற குழப்பம் சூழ மைதிலி சன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தாள். | ◯ |
| வீட்டின் முன்வாசல் கதவு அடைத்துதான் இருந்தது. மைதிலுக்கு ஒரே ஆச்சரியம். "கதவை யாரோ திறந்த மாதிரி சத்தம் கேட்டுச்சே?" என்று புலம்பிக் கொண்டே வெளியில் வந்து பார்த்தாள். | ◯ |
| மைதிலியின் அண்டை வீட்டார் அவளுக்கு நன்றி கூறினர். | ◯ |

1 2 3 4 5 6

LIVEWORKSHEETS